


# “அறிவின் தேவையை வலியுறுத்த வேண்டிய காலம் இது!”

**கழக இளைஞர் அணி நடத்திய ‘தி.மு.க 75 அறிவுத் திருவிழா’ நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக நடைபெற்ற ‘இருவண்ணக் கொடிக்கு வயது 75’ கருத்தரங்கத்தின் எட்டாவது அமர்வுக்குத் தலைமை வகித்து, கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி, எம்.பி. அவர்கள் ஆற்றிய உரை :**



**கனிமொழி கருணாநிதி எம்.பி.**
**கழக துணைப் பொதுச் செயலாளர்**

“உதயநிதி அவர்கள் மிக முக்கியமான ஒரு காலகட்டத்திலே இந்த நிகழ்ச்சியை நடத்திக் கொண்டிருக்கிறார். தேர்தல் வரப்போகிறது. பல்வேறு கணைகள் நம்மை நோக்கி வீசப்பட்டுக் கொண்டிருக்கின்றன. எந்தத் திசையிலிருந்து எந்தத் தாக்குதல் திராவிட முன்னேற்றக்கழகத்தை நோக்கி வந்துகொண்டிருக்கிறது என்று தெரியாத அளவுக்கு நம் மீது பல்முனைத் தாக்குதல்கள். அவர்களை எதிர்த்து நின்று அறிவியல் ரீதியாக கேள்வி கேட்பதற்கோ, கருத்தியல் ரீதியாக அவர்களை மறுத்துப் பேசுவதற்கோ வேறு யாரும் கிடையாது. நாம் மட்டும்தான் இருக்கிறோம்.

கருத்தியல் ரீதியாக என்றாலும், அரசியல் மூலம் என்றாலும், அறத்தின்பால் நின்று அவர்களை எதிர்க்கக்கூடியவர்கள் என்ற தெளிவு, அவர்களுக்கு இருப்பதால்தான், எல்லாவிதத்திலும் நம்மை நோக்கித்தான் கணைகளை அவர்கள் எய்துகொண்டிருக்கிறார்கள். இது நமக்குப் பழகிய ஒன்றுதான்.

## அறிவாயுதம்

இன்றைக்கு அறிவுத் திருவிழா நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நாங்கள் மட்டும்தான் எல்லாம் தெரிந்தவர்கள், இந்த உலகத்தின் சட்டங்களையெல்லாம் எழுதக்கூடியவர்கள் நாங்கள்தான் என்று எல்லாவற்றையும் தங்களுடைய கையிலே வைத்துக்கொண்டிருந்த அதிகார வர்க்கத்தை எதிர்த்துப் போராடுவதற்கு சாதாரண, சாமானிய ஒடுக்கப்பட்ட மக்களாக இருந்த திராவிட இயக்கத்தைச் சார்ந்தவர்கள் எடுத்த ஆயுதம் அறிவாயுதம்தான், மொழி என்ற ஆயுதம்தான். அந்த மொழியைத்தான் உதயநிதி அவர்கள் இந்த அறிவுத் திருவிழாவிலே முன்வைத்திருக்கிறார். இன்றைக்கு நாம் இந்த அமர்வில் அதிகமாகப் பேசப்போவது கலையைப் பற்றி இலக்கியங்களைப் பற்றி, நாம் இலக்கியங்களைக் கையாண்ட விதத்தைப் பற்றி, திரை உலகத்தை எப்படி நாம் நம்முடைய கருத்துகளைக் கொண்டுபோய் சேர்க்க வேண்டிய வாகனமாக மாற்றினோம் என்பதைப் பற்றியெல்லாம், இங்கே பேசுவதற்கு அந்தந்தத் துறையைச் சார்ந்த விற்பன்னர்கள் வந்திருக்கிறார்கள்.

## சாமானியர்களின் மொழி

ஒரு காலகட்டத்தில் ‘ஆனந்த விகடன்’ இதழில் வரும் துணுக்குகூட ‘அவாள்’ மொழியில்தான் இருக்கும். அதற்கு எதிரான மொழியில் ‘முரசொலி’யில் எழுதப்பட்ட துணுக்குதான் ‘ஆண்டி - போண்டி’. திரைப்படங்களில் அவர்களுடைய மொழிதான், இலக்கியங்களில் அவர்களுடைய வாழ்க்கை, அவர்களுடைய பழக்கவழக்கங்கள், அவர்களுடைய மதிப்பீடுகள்தான். அதைத்தாண்டி, சாதி அடுக்குகளில் யாரெல்லாம் அவர்களுக்குக் கீழே இருந்ததாக நினைத்தார்களோ, அவர்களுடைய வாழ்க்கையெல்லாம் இலக்கியத்தில் இடம்பெறவில்லை. திரைப்படங்களில், சமஸ்கிருதம் கலந்தமொழிதான். நம்முடைய சாதாரண மக்களுடைய மொழி, வலி எதற்குமே அங்கே இடம் கிடையாது. அதையெல்லாம் உடைத்தது திராவிட இயக்கம்.



## பணத்துக்குத் தீட்டு இல்லை!

என்.எஸ்.கிருஷ்ணன் படத்தில் ஒரு காட்சி. பண்ணையில் வேலை பார்க்கக்கூடிய ஒடுக்கப்பட்ட சாதியைச் சார்ந்த ஒருவர் தொட்ட மண் பாத்திரத்தை, முதலாளியிடம் கொண்டுபோய் தரும்போது ‘இது அவன் தொட்டது. இதை நான் பயன்படுத்த மாட்டேன்’ என்று போட்டு உடைத்துவிடுவார். அடுத்து ஒரு வெள்ளிக் கிண்ணத்தையும் ‘இன்னொருவர் பயன்படுத்தி விட்டார். தீட்டுப்பட்டுவிட்டது’ என்பார். உடனே என்.எஸ்.கிருஷ்ணன் மேசையின் மீது இருக்கும் பணத்தின் மீது தண்ணி தெளிப்பார். ‘ஏண்டா பணத்தின் மீது தண்ணீர் தெளிக்கிறாய்?’ என்று முதலாளி கேட்கும்போது ‘இந்தப் பணமும் பல சாதிக்காரர்கள் தொட்டுத்தான் வந்தது. தீட்டுப்பட்டுவிட்டது என்று அதனால் தெளித்தேன்’ என்பார். ‘அதற்காகப் பணத்தின்மீது யாராவது தண்ணீர் தெளிப்பார்களா?’ என்று கேட்டுவிட்டு மனைவியை அழைத்து, ‘தண்ணீரைத் துடைத்து அந்தப் பணத்தை பத்திரமாக உள்ளே எடுத்து வை’ என்பார். அடுத்ததாக அந்தப் பண்ணையாரும் அவரின் மனைவியும் வெளியே வருவார்கள். அப்போது அந்தப் பண்ணையில் வேலை பார்க்கும் ஒருவர் வந்து, ‘அம்மாவுடைய மூக்குத்தி காணாமல் போய்விட்டது என்று சொன்னீர்களே, அந்த மூக்குத்தியை நான் கண்டுபிடிச்சிட்டேன் அய்யா. கீழே கிடந்தது’ என்று கொண்டுபோய் கொடுப்பார். அந்த முதலாளி அதைக் கைகளால் வாங்கிக்கொண்டு கண்களில் ஒற்றிக்கொண்டு சட்டைப் பைக்குள் வைத்துக்கொள்வார். உடனே என்.எஸ்.கே. ‘பரவாயில்லையே பொருள்களுடைய விலைக்கு ஏற்றதுபோல் உங்களுடைய சாதி குறைந்துகொண்டே வருகிறதே?’ என்று கேட்பார்.

## பத்திரிகைகள்

நகைச்சுவையாக இருந்தால்கூட இப்படிப்பட்ட சாதிய கட்டமைப்பை உடைத்தது திராவிட இயக்கம். சில பேர் மட்டுமே பத்திரிகை நடத்த வேண்டும் என்று இருந்த அந்தக் காலகட்டத்தைத் தாண்டி, இருநூறு பத்திரிகைகளுக்கு மேல் சாமானிய, ஒடுக்கப்பட்ட சமூகங்களில் இருந்து வந்த மனிதர்களை, பத்திரிகை நடத்தக்கூடியவர்களாக மாற்றியது திராவிட இயக்கம். அதேபோல் தெருவுக்குத் தெரு நூலகங்களைத் திறந்து எல்லோரையும் படியுங்கள் என்று அழைத்தது திராவிட இயக்கம்.

## ‘பராசக்தி’யும் ‘தினமணி’யும்

நாம் இங்கே அனைவரும் மிகச் சிறப்பாக, எப்படி நம்முடைய தமிழ்ப் பண்பாட்டை, இலக்கியத்தை, நாடகத்தை, கலைகளை நம்முடைய மொழியை, நம்முடைய தமிழ் இனத்தைத் தி.மு.க காப்பாற்றியிருக்கிறது என்று பேசியிருக்கிறோம். ‘பராசக்தி’ படத்தை வெளியிடுவதற்கு எத்தனையோ தடைகள். அவற்றையெல்லாம் தாண்டி ‘பராசக்தி’ வெளியாகி, மக்களால் வரவேற்பு பெற்றபோது ‘தினமணி’யில் ஒரு விமர்சனம் எழுதினார்கள். ‘ஒரு தகர டப்பாவில் கூழாங்கற்களைப் போட்டு கரகரகர என ஆட்டியதுபோல் வசனங்கள் இருந்தன’ என்று எழுதியிருந்தார்கள். நிச்சயமாக அவர்களுக்கு அப்படித்தான் இருந்திருக்கும். அவர்களுடைய காதுகளுக்கு அப்படி சென்றடைய வேண்டும் என்று எழுதப்பட்ட படம்தான் ‘பராசக்தி’. அந்தச் சத்தம் இன்றுவரை கேட்டுக்கொண்டிருக்கிறது. விமர்சனம் எழுதியவர்கள் எங்கே போனார்கள் என்று தெரியவில்லை.

## எதற்காக இந்தப் பெயர்?

நான்கூட யோசித்தேன், ‘உதயநிதி எதற்காக இதற்கு அறிவுத் திருவிழா என்று பெயர் வைத்திருக்கிறார்?’ என்று. ஏனென்றால், இப்போது அறிவு அவசியத் தேவையாக இருக்கின்றது. ‘பிளாஸ்டிக் சர்ஜரிக்கு முன்னோடியே நாம்தான். ஒரு யானைத் தலையை அறுத்து மனிதனுக்குப் பொருத்தக்கூடிய அளவுக்கு நமக்கு அறிவியல் ஞானம் இருந்தது’ என்று பிரதமர் பேசுகிறார். பா.ஜ.க. எம்.பி அனுராக் தாக்கூர், ‘முதன்முதலில் நிலவுக்குப் போனது அனுமன்தான்’ என்கிறார். இந்தக் காலகட்டத்தில்தான் நாம் மறுபடியும் அறிவுக்கான தேவையைப் பேச வேண்டும்.

விவாதங்களில் நம்பிக்கையே இல்லாத ஆட்சி, ஒன்றியத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அவர்களுக்கு எதிராக, மறுபடியும் நாம் அறிவாயுதத்தை எடுக்க வேண்டும். அதற்கு இப்படிப்பட்ட மேடைகள் மீண்டும் மீண்டும் உருவாக்கப்பட வேண்டும். நம் முதலமைச்சர், அண்ணன் தளபதி அவர்கள், ஒவ்வோர் ஊரிலும் புத்தகக் கண்காட்சிகளை நடத்திக்கொண்டிருக்கிறார். எழுத்தாளர்களுக்கு கனவு இல்லங்களை வழங்குகிறார்.

வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தத்தில் நீங்கள் ஹரியானாவில் ஏமாற்றலாம், பீகாரில் ஏமாற்றலாம், மகாராஷ்டிராவில் ஏமாற்றலாம், ஆனால், தமிழ்நாட்டில் அது நடக்காது. இங்கே களத்திலே நிற்பதற்கு உடன்பிறப்புகள் இருக்கிறார்கள். அறிவை முன்வைத்து நாங்கள் இயக்கம் நடத்திக் கொண்டிருக்கிறோம். ஆதிக்கத்தை எதிர்கொள்ள நாங்கள் அறிவை வளர்க்கிறோம் என்று சொல்லி, இந்த அறிவுத் திருவிழாவை நடத்திக் கொண்டிருக்கக்கூடிய உதயநிதி அவர்களுக்கும் இளைஞர் அணிக்கும் என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.” ●

## அனைவரும் போற்றும் அறிவுத் திருவிழா!

**அறிவுத் திருவிழாவின் ஒரு பகுதியாக நடைபெற்ற ‘முற்போக்கு புத்தகக்காட்சி’யில் ஒவ்வொரு பதிப்பகத்திலும் அதிகம் விற்பனையான நூல்கள் :**




முத்தமிழறிஞர் பதிப்பகம் :
காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு

ஸ்ரீசெண்பகா பதிப்பகம் :
தளபதி ஓர் அன்பாலயம்

Periyar books.com :
Why Were Women Enslaved?

வேரல் புக்ஸ் :
ஊத்தாம்பல்லா (இருளர்கள் குறித்த நாவல்)

அறம் பதிப்பகம் :
ஆதி திராவிடர் வரலாறு

நிதர்சனம் :
கலைஞரின் படைப்புலகம்